Im-pos-si-bil'i-ty, *n.* அருமை, அரிது, துல்லபம்
Im'post, *n.* தீர்வை, கடமை, வரி, குடியிறை, பகுதி
Im-pos'tor, *n.* சூதன், வஞ்சகன், கள்வன்,பேடீசக்காரன்
Im-pos'ture, *n.* எத்து, வஞ்சகம், கள்ளம், பாசாங்கு
Im'po-tence, Im'po-ten-cy, *n.* } பலவறுதி, பலட்சயம், பலஹீனம்
Im-pov'er-ish, *v. t.* தரித்திரமாக்கு, நல்கூர்வி
Im'pre-cate, *v. t.* திட்டு, சபி, சாபங்கூறு, வை
Im-preg'nate, *v. t.* சினைப்பி, சூற்படுத்து, நிறைவி
Im'press, *n.* அச்சு, தழும்பு, அழுத்தம், பதிவு, பதிப்பு
Im-press', *v. t.* பதி, அழுத்து, அமுக்கு, உறுத்து
Im-pres'sion, *n.* பதிவு, பதிப்பு; நினைவு, சாயல்
Im-pris'on, *v. t.* காவலில்வை, காவற்பண்ணு, சிறைப்படுத்து
Im-prob-a-bil'i-ty, *n.* அசம்பவம், அசாத்தியம்
Im-prop'er, *a.* தகாத, தகாமையான, நியாயஹீனமான
Im-pro-por'tion-a-ble, Im-pro-por'tion-ate, *a.* } பிரமாணமற்ற, சாங்கமில்லாத, ஒழுங்கில்லாத
Im-pro-pri'e-ty, *n.* தகாமை, கூடாமை, அபசாரம், அனுசாரம்
Im-prove', *v.* அதிகப்படு, சீர்ப்படு; செம்மையாக்கு, தேற்று
Im-prove'ment, *n.* அதிகரிப்பு, நன்மைவளர்ச்சி, நயப்பு
Im-prov'i-dence, *n.* சாவதானமின்மை, முன்னெண்ணுமை
Im-pru'dence, *n.* புத்தித்தாழ்ச்சி,ஆராய்வின்மை,அவிவேகம்
Im'pu-dence, *n.* நாணக்கேடு, வெட்கமின்மை, திமிர்ச்சி
Im-pugn', *v. t.* குறைசொல்லு, குற்றஞ்சொல்லு
Im'pulse, *n.* உற்சாகம், முயற்சி, ஊக்கம், ஏவு, உழப்பு
Im-pu'ni-ty, *n.* தண்டனைக்கு நீங்குகை
Im-pure', *a.* சுத்தமில்லாத, சுத்தமற்ற, அசுத்த, அசுசியான

Im-pu'ri-ty, *n.* அழுக்கு, அசுத்தம், சுத்தவீனம், அசுசி
Im-pute', *v. t.* சாட்டு, சுமத்து, சூட்டு, பொறுப்பி
In, *pre.* இல், கண், உள், வயின், உழி, அகம்
In-a-bil'i-ty, *n.* திராணியின்மை, அசாமர்த்தியம்
In-ac'tion, *n.* சோம்பு, மந்தம், அசையாநிலை, செயலின்மை
In-act'ive, *n.* சோம்புள்ள, சோம்பான, மந்த
In-ad'e-qua-cy, *n.* குறை, தகாமை, தாழ்ச்சி, போதாமை
In-ad-vert'ence, In-ad-vert'en-cy, *n.* மோசம், தவறு, பிசகு, எண்ணிக்கையின்மை, தப்பு
In-am-o-ra'to, *n.* நண்பன், காதலன்
In-an'i-mate, *a.* நிர்ச்சீவ, உயிரில்லாத, சீவனற்ற
In-an'i-ty, *n.* வெறுமை, சூனியம், வெளி, இன்மை
In-ap'pli-ca-ble, *a.* தகுதியற்ற, பொருந்தாத, ஒவ்வாத
In-ar-tic'u-late, *a.* தீர்க்கமற்ற, ஓசையில்லாத
In-au'gu-ral, *a.* பட்டஞ்சூட்டுதற்குரிய
In-au'gu-rate, *v. t,* பட்டங்கட்டு, பட்டங்கொடு, ஏற்படு
In'born, In'bred, *a.* சுய, இயல்பான, சகசமான, உடனிகழும்
In-cal'cu-la-ble, *a.* அளவில்லாத, எண்ணிறந்த
In-cant-a'tion, *n.* மந்திரோச்சாரணம், செபம்
In-ca-pac'i-tate, *v. t.* ஒடுக்கமாக்கு, சத்துக்குறை
In-car'cer-ate, *v. t.* சிறைச்சாலையிலடை, காவலில்வை
In-carn-a'tion, *n.* அவதாரம், மூர்த்திகரம்; தசைவளர்ச்சி
In-case', *v. t.* உறையிலிடு, மூடு
In-cend'i-a-ry, *n.* வீடுசுட்டவன்
In'cense, *n.* சுகந்திகம், தூபம், பூம்புகை, நறும்புகை.
In-cense', *v. t.* கோபமெழுப்பு, சினமூட்டு, வன்மம்மூட்டு
In-cen'tive, *n.* தூண்டுகிறது, மூட்டுகிறது, எழுப்புகிறது
In-cep'tive, *a.* துவக்கமான, மோனையான, ஆரம்பமான

In-cer-a'tion, *n.* மெழுகடை, மெழுகுபூச்சு [டாத
In-ces'sant, *a.* இடைவிடாத, ஓயாத, ஒழியாத, தடைப்ப
In'cest, *n.* முறைகெட்டபுணர்ச்சி, முறைகெட்டகலவி
Inch, *n.* அங்குலம், (அங்குட்டமுதல்முளி) இடை [தம்
In'ci-dence, *n.* தற்செயல், இடைச்சம்பவம், இடைச்சங்க
In'ci-dent, *n.* காரியம், உபகாரியம், தற்செயல், சம்பவம்
In-cip'i-ent, *a.* தொடக்கமான, அடியிடுகிற, அடிகோலுகிற
In-cis'ion, *n.* கீறு, குத்து, வெட்டு, சேவுகை
In-ci'sor, *n.* முன்வாய்ப்பல், அக்கிரதந்தம்
In-cite', *v. t.* ஏவு, எழுப்பு, மூட்டு, தூண்டு, கிளர்த்து
In-clasp', *v. t.* பதி, இறுக்கிப்பிடி [ன்மை
In-clem'en-cy, *n.* கொடுமை, கடுமை, கடினம், பதமையி
In-clin-a'tion, *n.* சாய்வு, சார்பு, சரிவு, பற்று
In-cline', *v. t.* சாய், சரி, ஒருச்சாய், வளை
In-close', *v. a.* அடை, சுற்றியடை, வளைத்தடை, சூழ்
In-clos'ure, *n.* அடைப்பு, கொல்லை, கூடு, உள்ளடக்கப்பட்
In-clude', *v. t.* அடை, அகப்படுத்து, அடக்கு [டது
In-clu'sive, *a.* அடங்கிய, உள்ளான, மொத்தமான
In-cog', *ad.* மறைவாய், கரவாய், மாரீசமாய், ஒளிப்பாய்
In-cog'ni-to, *ad.* மறைவாய், இரகசியமாய், ஒளிப்பாய்
In'come, *n.* ஆதாயம், ஆயம், லாபம், வரத்து, வரவு
In-com-mode', *v. t.* அலைக்கழி, குழப்பு, அபசாரம்பண்ணு
In-com'pa-ra-ble, *a.* ஒப்பில்லாத, உவமையற்ற, நிகரற்ற
In-com-pat'i-ble, *a.* ஒவ்வாமையான, பொருந்தாமையான
In-com'pe-tent, *a.* குறைவான, தகாத, தாழ்ச்சியுள்ள
In-com-pre-hens-i-bil'i-ty, *n.* அறியக்கூடாமை, அகோசரம், மனோதீதம் [ந்தனையில்லாத
In-con-sid'er-ate, *a.* எண்ணமையான, எண்ணங்கெட்ட, சி

In-con-sist′ence,
In-con-sist′en-cy, *n.* ஒத்திராமை, ஒவ்வாமை, பொருந்தாமை, ஏகதேசம், பேதம்

In-con′ti-nence,
In-con′ti-nen-cy, *n.* இச்சைஅடக்கமின்மை, விரத்தமின்மை, விரகதாபம்

In-con-ven′ience,
In-con-ven′ien-cy, *n.* தகாமை, வசதியின்மை, ஒவ்வாமை, சாவகாசமின்மை

In-cor′po-rate, *v. t.* பொருந்து திரட்டு, கல, கூட்டு

In-cor-rect′, *a.* பிழையான, தப்பான, திருத்தமில்லாத.

In-cor′ri-gi-ble, *a.* அதிகேடான, திருத்தப்படக்கூடாத

In-cras′sate, *v. t.* தடிக்கப்பண்ணு, பலப்பி, கடுத்தமாக்கு

In-crease′, *n.* விருத்தி, மிகுதி, பெருக்கம், அதிகரிப்பு

In-crease, *v.* அதிகப்படு, பெருக்கு, உயர்த்து, கூட்டு

In-cre-du′li-ty,
In-cred′u-lous-ness, *n.* ஐயம், நம்பிக்கையீனம், சமுசயம், சந்தேகம்

In′cre-ment, *n.* பெருக்கம், வளர்ச்சி, மலிவு, விருத்தி

In′cu-bate, *v. t.* அடைகா, அடைகிட, அபயங்கா

In′cu-bus, *n.* அமுக்கிப்பேய், அமுக்கன்

In-cul′cate, *v. t.* படிப்பி, கற்பி, உணர்த்து, விளக்கு

In-cul′pate, *v. t.* குற்றஞ்சாட்டு, குற்றஞ்சார்த்து

In-cum′ben-cy, *n.* படுக்கை, சாய்வு, ஆட்சியிலிருக்கை

In-cum′bent, *n.* கடனாளி, உரித்தாளி, பொறுப்பாளி

In-cur′, *v. t.* வருவி, உண்டாக்கு, ஏதுவாக்கு, அடை

In-cur′sion, *n.* பகைவர்நாட்டுக்குட்செல்லுகை

In-curve′, *v. t.* வளை, வில்வளைவாக்கு

In-dart′, *v. t.* உருவப்பாய்ச்சு, உள்ளிடு

In-debt′, *v. t.* கடன்படுத்து

In-de-clin′a-ble, *a.* வேற்றுமையுருபேற்றப்பெறாத

In-deed′, *ad.* மெய்யாக, உண்மையாக, நிச்சயமாக

In-de-fat′i-ga-ble, *a.* இளைப்பில்லாத, தொய்வில்லாத

In-de-feas'i-ble, *a.* சூனியமாக்கக்கூடாத, சபலத்துவமான
In-def'in-ite, *a.* நிசமற்ற, எல்லையற்ற, திட்டமற்ற
In-del'i-ble, *a.* அழிபடக்கூடாத, மங்காத [ணு
In-dem'ni-fy, *v. t.* உத்தரவாதம்பண்ணு, ஈடுகட்டு, ஈடுபண்
In-dem'ni-ty, *n.* உத்தரவாதம், பிணை, ஈடு, பாத்தியம்
In-dent', *n.* வெட்டு, முத்திரைச்சுவடு
In-dent', *v. t.* கருக்குக்கொத்து, ஒப்பந்தமுறிகொடு
In-dent'ure, *n.* நிபந்தனைச்சீட்டு
In-de-pend'ence, In-de-pend'en-cy, *n.* } சுவாதீனம், தன்னிட்டம், அனாதீனம்
In-de-term'in-ate, *a.* இன்னதென்றுகுறியாத, வரைவுபடா
In'dex, *n.* அடையாளம், குறி, அட்டவணை; காதமாபகம்
In'diancorn, *n.* சோளம், சோளன்
In'di-cate, *v. t.* குறி, காட்டு, குறிப்புக்காட்டு, சுட்டு
In-dic'a-tive, *a.* காட்டுகிற, குறிக்கிற, சுட்டுகிற
mood, சுயம்பிதத்துறை
In-dict', *v. t.* குற்றம்பாரி, பாரஞ்சுமர்த்து [கடுதாசி
In-dict'ment, *n.* முறைப்பாட்டுக்கடுதாசி, குற்றச்சாட்டுக்
In-dif'fer-ence, *n.* உதாசீனம், தடஸ்தம், அபட்சம்
In'di-gence, *n.* வறுமை, தரித்திரம், குறைச்சல்
In-dig'en-ous, *a.* சுயதேசஉற்பத்தியான
In-di-ges'tion, *n.* அசீரணம், அபாகம்
In-dig'it-ate, *v. t.* சுட்டிக்காட்டு
In-dig'nant, *a.* எரிவுள்ள, எரிச்சலுள்ள, கோபமுள்ள
In-dig-na'tion, *n.* எரிச்சல், கோபம், மனஸ்தாபம்
In'di-go, *n.* நீலம், பூநீலம்
In'di-rect, *a.* குறுக்கடியான, மறுதலையான, தப்பிதமான
In-dis-cerp'ti ble, *a.* கரைந்தழியாத

In-dis-cre'tion, *n.* புத்திக்குறைவு, புத்தியீனம்
In-dis-pens-a-bil'i-ty, *n.* தேவை, அகத்தியம், அவசியம்
In-dis-pose', *v. t.* வெறுக்கப்பண்ணு, குழப்பு, பழுதுபண்ணு
In-dis-tinct', *a.* கருகலான, தெளிவில்லா, மங்கலான, தீர்க்க [மற்ற
In-dite', *v. t.* வாசகமிணை, வாசகஞ்சொல்லு, வசனி
In-di-vid'u-al, *n.* ஆள், ஒருவன், ஒருத்தி, ஒன்று
In-di-vid-u-al'i-ty, *n.* தனிமை, ஒருமை, வியத்தி
In-di-vis-i-bil'i-ty, In-di-vis'i-ble-ness, *n.* பிரிக்கப்படாமை, பகுக்கப்படாமை, அசேத்தியம்
In'do-lence, *n.* சோம்பு, சோர்வு, அசட்டை, அயர்தி
In'do-lent, *a.* சோம்பான, அயர்தியான, அசாக்கிர
In-du'bi-ta-ble, *a.* சந்தேகமில்லாத, ஐயமில்லாத
In-duce', *v. t.* செய்வி, உட்படுத்து, ஏவு
In-duct', *v. t.* ஏற்படுத்து, உட்படுத்து
In-duc'tion, *n.* வேதனுமானம், வைதனியம்; ஏற்படுத்தல்
In-duct'ive, *a.* வேதனுமான, வைதனிய
In-due', *v. t.* கொடு, அருளு, ஈ, அலங்கரி [கொடு
In-dulge', *v.* இடங்கொடு, பொறு, சீராட்டு, இளக்காரங்
In-dul'gence, *n.* இளக்கம், இளக்காரம், சீராட்டு
In'du-rate, *v. t.* கடினப்படுத்து, உரப்பி, வைரமாக்கு
In-dus'tri-ous, *a.* தாளாண்மையுள்ள, சுறுசுறுப்புள்ள
In'dus-try, *n.* முயற்சி, சாக்கிரதை, உழைப்பு, ஊக்கம்
In'dwell-ing, *n.* அகத்துறைவு, மனோவாசம்
In-e'bri-ate, *n.* வெறியன், குடிகாரன்
In-ef'fa-ble, *a.* சொல்லிமுடியாத, நாவுக்கடங்காத
In-ept', *n.* தகுதியற்ற, தகாத, அடாத, புத்தியீனமான
In-e-qual'i-ty, *n.* ஒத்திராமை, ஒவ்வாமை, பேதம்
In-ert', *a.* அசேட்டன், ஆலசிய, மந்த்

In-er'tia, *n.* அசேட்டனம், மாந்தியம், ஆலசியம்
In-ev'i-ta-ble, *a.* விலக்கவொண்ணுத, தப்பாத, தவருத
In-ex'o-ra-ble, *a.* இரங்காமையான, கடினமான
In-eye', *v. t.* கிளையொட்டவை
In-fal'li-ble, *a.* தவருத, பிழைபடாத, திடமான, திட்ட [மான
In'fa-mous-ness, In'fa-my, *n.* அவகீர்த்தி, அபதூறு, துர்க்கீர்த்தி, அவக்கியாதி
In'fan-cy, *n.* இளமை, பாலத்துவம், பாலியம், இளம்பிராயம்
In'fant, *n.* குழந்தை, குழவி, பாலன், பாலகன், பாலகி
In-fant'i-cide, *n.* சிசுவதைசெய்வோன், சிசுவதை
In'fant-ry, *n.* பதாதி, காலாட்சேனை, துபாய்க்கிச்சேவகர்
In-fat'u-ate, *v. t.* மயக்கு, மனதைக்கலக்கு
In-fect', *v. t.* தொற்றவை, தொற்றப்பண்ணு, கறைப்படுத்து
In-fec'tion, *n.* தொற்று, கறை, பழுது, நச்சுக்காற்று
In-fer', *v. t.* அனுமி, அனுமானி, அனுமிதிசெய்
In'fer-ence, *n.* அனுமானம், அனுமை, அனுமிதி
In-fe'ri-or, *a.* கீழான, குறைந்த, தாழ்ச்சியான
In-fer'nal, *a.* கீழுலகத்துக்கடுத்த, நரகத்துக்கடுத்த [ணு
In-fest', *v. t.* பழுதாக்கு, குழப்பு, உபாதி, தொந்தரைபண்
In'fi-del, *n.* அசிரத்தன், அவிசுவாசி, நாஸ்திகன்
In-fi-del'i-ty, *n.* அசிரத்தம், அவிசுவாசம், விசுவாசபங்கம்
In'fi-nite, *a.* முடிவற்ற, கடையிலா, அனந்த
In-fin-i-tes'i-mal, *n.* நுட்பானுநுட்பம், அணு
In-fin'i-tive mood, *n.* செயவெச்சத் துறை
In-fin'i-tude, In-fin'i-ty, *n.* எல்லையின்மை, முடிவின்மை, மிகுதி, அளவின்மை, மட்டின்மை, எல்லைகடந்தது
In-fix', *v. t.* அழுத்து, பதி, இறுக்கு, உட்பாய்ச்சு, கடாவு
In-flame', *v.* எரி, அழற்று, நெருப்புமூட்டு, கோபமூட்டு

In-flam-ma'tion, *n.* அழற்சி, தாபிதம், எரிவு
In-flate', *v. t.* ஊதப்பண்ணு, பருப்பி, விம்மசெய்
In-flect', *v. t.* திருப்பு, வளை; பிறழ்த்து, ரூபாந்தரி
In-flec'tion, *n.* வளைவு; இசைப்பிறழ்வு, ரூபகரணம்
In-flict', *v. t.* தண்டி, உறுத்து, படுத்து, சுமத்து
In'flu-ence, *n.* சக்தி, அதிகாரம், சத்துவம், தகுதி
In'flu-ence, *v. t.* அதிகரிப்பி; முகாமைசெலுத்து
In-flu-en'tial, *a.* செல்வாக்குள்ள, முகாமையுள்ள
In'flux, *n.* உட்புகுகை, உட்பெருக்கம், உட்பிரவேசம்
In-fold', *v. t.* சுருட்டு, மடி, சுற்று, இடுக்கு, உட்படுத்து
In-form', *v. t.* தெரியப்படுத்து, அறிவி, சொல்லியறிவி
In-form-a'tion, *n.* அறிவு, படிப்பினை, சமாச்சாரம், செய்தி.
In-fract', *v. t.* உடை, மீறு, கடத்து [படாத
In-fran'gi-ble, *a.* முறிக்கக்கூடாத, மீறப்படாத, பிரிக்கப்
In-fringe', *v. t.* கடத்து, மீறு, குலை
In-fu'ri-ate, *v. t.* மூர்க்கங்கொள்ளச்செய், கோபமூட்டு
In-fus'cate, *v. t.* கறுப்பாக்கு, இருளப்பண்ணு
In-fuse', *v. t.* ஊட்டு, உட்செலுத்து, பருக்கு, பாய்ச்சு
In-fu'sion, *n.* ஊட்டுகை; தண்கஷாயம், வாசனம்
In-gen'er-ate, *v. t.* உள்ளாக்கு, உள்ளேயுண்டாக்கு
In-ge'ni-ous, *a.* விவேகமான, யூகமுள்ள, சாமர்த்தியமுள்ள
In-ge-nu'i-ty, *n.* சூழ்ச்சி, நுணுக்கமானயுத்தி, யூகம், விவேகம்
In-gen'u-ous, *a.* வெளியான, சாதுவான, உதார
In-gest', *v. t.* இரைப்பைக்குட்செலுத்து, புகட்டு
In'got, *n.* பாளம், பாளக்கட்டி, சலாகை
In-graft', *v. t.* பதி, ஒன்றவை, ஒட்டு, பொருந்தவை
In'grain, *v. t.* பஞ்சுசாயமூட்டு, மயிர்ச்சாயங்காய்ச்சு
In-gra'tiate, *v. t.* தயவுக்குள்ளாக்கு, வசப்படுத்து

In-grav'i-date, *v. t.* சினைப்பி, கருக்கொள்ளப்பண்ணு
In-gre'di-ent, *n.* உதவிப்பொருள், துணைப்பொருள்
In'gress, In-gress'ion, *n.* } உட்பிரவேசிக்கை, உட்செல்லுகை
In'guin-al, *a.* வங்குசணிய, அரைப்பூட்டு
In-gulf', *v. t.* அமிழச்செய், அமுக்கு, அமிழ்த்து, விழுங்கு
In-hab'ile, *a.* அடாத, ஒவ்வாத, இணங்காத, தகாத
In-hab'it, *v.* வசி, சஞ்சரி, குடியிரு, குடியேறு
In-hab'it-ant, In-hab'it-er, *n.* } குடியானவன், பிரசை, தேசவாசி, குடிஞன், குடிபதி
In-hale', *v. t.* மூச்செடு, சுவாசம்வாங்கு, மூச்சுவாங்கு
In-here', *v. i.* உள்ளேதங்கு, உள்ளேநில், புதை
In-he'rent, *a.* சென்மச்சுபாவமாயுள்ள, சகசமான, சகித
In-her'it, *v. t.* சுதந்தரி, உரிமைவழியாயனுபவி
In-hib'it, *v. t.* தடைப்படுத்து, தடு, கட்டிப்பண்ணு, மறி
In-hu'mate, In-hume', *v. t.* } அடக்கம்பண்ணு, புதை, பிரேதஞ்சேமி
In-im'ic-al, *a.* பகையான, சினேகமற்ற, பட்சமற்ற
In-iq'ui-ty, *n.* குழப்பம், குற்றம், அக்கிரமம், ஆகாமியம்
In-i'tial, *n.* முதற்குறிப்பெழுத்து, முதற்குறிப்பு
In-i'tiate, *v. t.* படிப்பி, பயிற்று, பழக்கு
In-ject', *v. t.* உட்செலுத்து, புகட்டு, புகுத்து
In-jec'tion, *n.* பிட்சேபணம், வஸ்தி, புகட்டுமருந்து
In-junc'tion, *n.* கட்டளை, ஆஞ்ஞை, எச்சரிப்பு, நியமம்
In'jure, *v. t.* கெடு, அழி, பழுதாக்கு, ஊறுபடுத்து
In'ju-ry, *n.* அபகாரம், கேடு, அபாயம், ஊறுபாடு, பழுது
In-jus'tice, *n.* நீதியீனம், அடாவடித்தி, அநீதி, அநீதம்
Ink, *n.* மை, மசி
Ink, *v. t.* மைபோடு, மைபூசு, கரிப்பூசு

Ink'ling, *n.* பயில், சைகை

Ink'stand, *n.* மைக்கூடு, மசிதானி

In-lace', *v. t.* சித்திரப்பின்னலால்அலங்கரி

In'land, *a.* உள்நாட்டுக்கடுத்த, கடலுக்குத்தூரமான

In-lay', *v. t.* ஒட்டு, பதி, குயிற்று

In'let, *n.* கதவு, பிரவேசம், துவாரம், கடை

In'mate, *n.* விடுதிக்காரன், சகவாசி

Inn, *n.* விடுதிவீடு, சத்திரம், மடம், சாவடி

In'nate, *a.* இயல்பான, சகசமான, சுதந்திரமான

In'ner, *a.* உள்ளான, உள்ளுக்குள்ளான

In'no-cence, In'no-cen-cy, *n.* மாசின்மை, குற்றமின்மை, சுத்தம், மனப்புனிதம், தட்டமின்மை, தீங்கின்மை

In-no-va'tion, *n.* நூதனம், புதுமை, ஒழுங்கின்மை

In-nu-en'do, *n.* சாடை, சைகை, குறிப்பு

In'nu-ent, *a.* ஆர்த்திக, குறிப்புள்ள

In-nu'mer-a-ble, *a.* எண்ணிறந்த, கணக்கில்லாத

In-oc'u-late, *v. t.* பால்கட்டு, மசூரிப்பால்வை

In-of-fens'ive, *a.* இடறற்ற, தீமையில்லாத, சாதுவான

In-or'din-ate, *a.* ஒழுங்கற்ற, மிகுதியான, மட்டுக்கதிமான

In-os'cu-late, *v. t.* சந்துசெய், பொருத்து, ஒன்றுவி

In'quest, *n.* விசாரணை, விளக்கம்

In'qui-nate, *v. t.* அழுக்காக்கு, அசுத்தமாக்கு

In-quire', *v. t.* விசாரி, ஆய், ஆராய், வினவு, உசாவு

In-qui'ry, *n.* விசாரணை, சோதனை, ஆராய்ச்சி, உசாவு

In-qui-si'tion, *n.* விசாரணை, நீதிவிளக்கம், சோதனை

In-quis'i-tive, *a.* விசாரணையுள்ள, நூதன, ஆராய்வான

In'road, *n.* தேசத்துட்சென்றுகுறையாடுகை

In-sane', *a.* பைத்தியமுள்ள, புத்திக்குறைச்சலுள்ள

In-sane'ness, } n. } பைத்தியம், உன்மத்தம், வெறி, மத்தம்
In-san'i-ty, }
In-sa'tiate, *a.* தணியாத, ஆறாத, திருத்தியடையாத
In-scribe', *v. t.* எழுது, தீட்டு, வரை, மேல்விலாசம்போடு
In-scrip'tion, *n.* எழுத்துவரைவு, சாசனம், மேல்விலாசம்
In-scru'ta-ble, *a.* ஆராயக்கூடாத, ஆராய்ந்துமுடியாத
In'sect, *n.* பூச்சி, புழு, வண்டு, குளவி, சிற்றுயிர்
In-sec'tion, *n.* வெட்டுகை, சீவுகை
In-sens'i-ble, *a.* உணர்ச்சியற்ற, சுரணைகெட்ட
In-sep'a-ra-ble, *a.* பிரிக்கக்கூடாத, பகுக்கக்கூடாத
In-sert', *v. t.* இடையிற்சேர், இடையிலெழுது
In'side, *n.* உட்புறம், உள், அகம், உட்பக்கம்
In-sid'i-ate, *v. t.* பதிவிரு [டமான
In-sid'i-ous, *a.* சதியோசனையுள்ள, பதுங்கியிருக்கிற, கப
In-sid'i-ous-ness, *n.* சதியோசனை, கெருடு, கரவு, கள்ளம்
In'sight, *n.* உட்பார்வை, உள்ளாராய்வு, நுண்ணியவிசாரணை
In-sig'ni-a, *n.* குறிப்புகள், முத்திரை, குழூஉச்சின்னம்
In-sig-nif'i-cant, *a.* வியர்த்தமான, பலனில்லாத, உதவாத
In-sin-cere', *a.* மாயமான, நிதார்த்தமற்ற, பொய்யான
In-sin'u-ate, *v. t.* சைக்கையாய்ப்பேச, மனதிலழுத்து
In-sip'id, *a.* சுவையற்ற, இரசமற்ற, ருசியற்ற, சாரமற்ற
In-sist', *v. i.* நிலைநில், வற்புறுத்து
In-si'tion, *n.* ஒட்டவைக்கை, பொருத்துகை
In'so-late, *v. t.* வெயிலிற்காயவை, வறட்டு, சூரியபுடம்வை
In'so-lence, *n.* இறுமாப்பு, திமிர்ச்சி, நிந்தை, மேட்டிமை
In'so-lent, *a.* திமிர்ச்சியான, முதிர்ச்சியுள்ள, அகந்தையான
In-solv'en-cy, *n.* கடனிறுக்கத்தகாமை, கடனிறுக்கக்கூடா
In-spect', *v. t.* விசாரி, சோதி, ஆராய் [மை

In-spi-ra'tion, *n.* அருட்சி, தெருட்சி; ஆவாகனம்; சுவாசம்
In-spire', *v. t.* எழுப்பிவிடு, அருட்டு, தெருட்டு, முயற்று
In-spir'it, *v. t.* உயிர்ப்பி, ஆவிகொடு, ஏவு
In-spis'sate, *v. t.* இறுக்கு, தடிக்கச்செய், உறைவி
In-stall', *v. t.* பட்டங்கட்டு, உத்தியோகத்தில்வை
In-stall'ment, *n.* பட்டாபிஷேகம்; செலுத்திவரல்
In'stance, *n.* திட்டாந்தம், உதாகரணம், அத்தாட்சி
In'stance, *v. t.* திட்டாந்தப்படுத்து, உதாரணங்காட்டு
In'stant, *n.* தறுவாய், தற்சமயம்; கணம்
In'stant, *a.* அவசியமான, கைக்குடனான, சடுதியான
In-state', *v. t.* பட்டங்கட்டு; உத்தியோகம்வை
In-sta'tu-quo, இருந்தபடி, முன்னையநிலை
In-stead'of, ஈடாக, அடையாக, பிரதியாக, பதிலாக
In'step, *n.* புறங்கால், புறவடி
In'sti-gate, *v. t.* ஏவு, மூட்டு, எழுப்பு, தூண்டு
In-still', *v. t.* பதி, அழுத்து
In'stinct, *n.* சகிதஞானம், உபஞ்ஞை
In'sti-tute, *n.* கட்டளை, பிரமாணம், விதி, நியாயம்
In'sti-tute, *v. t.* ஏற்படுத்து, நியமி, ஸ்தாபி, கற்பி, விதி
In-sti-tu'tion, *n.* ஏற்பாடு, நியமம், சங்கம்; கலாசாலை
In-struct', *v. t.* படிப்பி, பயிற்று, உணர்த்து, கற்பி
In-struc-tion, *n.* படிப்பு, கல்வி, பயிற்சி, அறிவு, கற்பனை
In'stru-ment, *n.* கருவி, தளபாடம், உபகரணம், ஏது
In-stru-ment-al'i-ty, *n.* காரணம், முதன்மை, முகாமை
In-sub-or'di-nate, *a.* கீழ்ப்படியாத, அடங்காத, இணங்காத
In'su-late, *v. t.* பிரி, விலக்கிவை, நீக்கு, ஒற்றிவை
In'sult, *n.* அனாசாரம், நிந்தை, பழிப்பு, அவமானம்
In-sult', *v. t.* பழி, அவமானி, நிந்தி, ஏசு, இகழ்
In-su'per-a-ble, *a.* மேற்கொள்ளக்கூடாத, கடக்கக்கூடாத

In-sur′ance, *n.* ஈடு, பிணை, உத்தரவாதம், பொறுப்பு
In-sure′, *v. t.* நிச்சயி, நட்டத்தைநீக்கு
In-sur′gent, *n.* கலகக்காரன், இராச்சியவிரோதி
In-sur-rec′tion, *n.* ஊர்க்கலகம், ஊர்க்கலம்பகம்
In′te-ger, *n.* முழுவெண், பூரணாங்கம், அபின்னம்
In′te-grate, *v. t.* புதுப்பி, பூரணப்படுத்து, நிறை
In-teg′ri-ty, *n.* நிதானம், நேர்மை, உண்மை, செம்மை
In-teg′u-ment, *n.* போர்வை, புறணி, மடல், தோல்
In′tel-lect, *n.* அறிவு, உணர்வு, சேதனம், சைதன்னியம்
In-tel-lect′u-al, *a.* மானத, மனதுக்கடுத்த, புத்திக்கடுத்த
In-tel′li-gence, *n.* அறிவு, சைதன்னியம்; சமாசாரம்
In-tel′li-gent, *a.* அறிவுள்ள, கல்வியுள்ள, புத்தியுள்ள
In-tel′li-gi-ble, *a.* விளங்கப்படக்கூடிய, மனத்தெளிவான
In-tem′per-ance, *n.* மட்டின்மை, பெருந்தீன், அதிபானம்
In-tem′per-ate, *a.* மட்டற்ற, மிகுதியான, போராதுரமான
In-tend′, *v. t.* கருது, உத்தேசி, உத்தியோகி, எண்ணு, குறி
In-tense′, *a.* மகத்தான, அகோரமான, இறுக்கமான
In-ten′si-ty, *n.* இறுக்கம், உக்கிரம், உரப்பு, உறைப்பு
In-tent′, *n.* கருத்து, நோக்கம், எண்ணம், காரியம்
In-tent′, *a.* ஆவலான, சுறுசுறுப்பான, நோக்கங்கொண்ட
In-ten′tion, *n.* கருத்து, அபிப்பிராயம், சிந்தை, எண்ணம்
In-ten′tion-al, *a.* நினைத்த, செய்யவேண்டுமென்றுசெய்த
In-ter′, *v. t.* அடக்கம்பண்ணு, சவந்தாழ், சவஞ்சேமி
In-ter′ca-lar, In-ter′ca-la-ry, *a.* } இடையிற்சேர்த்த, அதிக
day, அதிதிவசம்
In-ter-cede′, *v. i.* மத்தியஸ்தஞ்செலுத்து, நடுப்பேசு
In-ter-cept′, *v. t.* தடு, தவிர், தடைப்படுத்து, மறி

In-ter-ces'sion, *n.* மத்தியஸ்தம், நடு
In-ter-chain', *v. t.* பிணை, சேர, தொடு, கொளுவு
In'ter-change, *n.* பண்டமாற்று, மாறிமாறிவரும்முறை
In-ter-cost'al, *a.* விலாவெலும்புக்கூடான
In'ter-course, *n.* உறவு, ஊடாட்டம், கலவி, சகவாசம்
In-ter-dict', *v. t.* மறி, தடு, மறு, விலக்கு
In'ter-est, *n.* பட்சம், பிரியம், பிரீதி; ஆதாயம்; வட்டி
In'ter-est, *v. t.* பிரியப்படுத்து, பிரீதியாக்கு
In'ter-est-ed, *a.* பிரீதியுள்ள, பிரியமுள்ள, பட்சமுள்ள
In'ter-est-ing, *a.* பிரீதியான, விரும்பப்படத்தக்க
In-ter-fere', *v. t.* இடையிலேநுழை, கையிடு, கூடு, முட்டு
In-ter-fer'ence, *n.* இடையிலேவருகை, கொளுவல்
In'ter-im, *n.* இடைவிட்டநேரம்
In-te'ri-or, *n.* அகம், அந்தரங்கம், நடு, அந்தப்புரம்
In-ter-jec'tion, *n.* தனியிடை, தனியிடைச்சொல்
In'ter-leaf, *n.* இடைவெள்ளொற்றை
In-ter-line', *v. t.* வரிக்கூடேயெழுது, வரிக்கிடையிலெழுது
In-ter-lope', *v. t.* தலையை, குறுக்கிடு, கள்ளவியாபாரம்பண்ணு
In'ter-lude, *n.* விகடவிநோதி, கோணங்கி
In-ter-mar'riage, *n.* பரஸ்பரவிவாகம்
In-ter-med'dle, *v. i.* தலையிடு, தலைபோட்டுக்கொள்ளு
In-ter-me'di-ate, *a.* இடையான, நடுவான, மத்தியிலுள்ள
In-ter-mit', *v.* விட்டுவிட்டுத்தொடங்கு; தாமதி, ஒழி
In-tern'al, *a.* அந்தரங்க, உள்ளத்திலுள்ள, உள்ளான
In'ter-po-late, *v. t.* இடையிலேயெழுது, இடையிலேவை
In-ter-pose', *v. t.* இடையிடு, இடைப்படுத்து, செருகு
In-ter'pret, *v. t.* வியாக்கியானம்பண்ணு, அர்த்தப்படுத்து
In-ter-pret-a'tion, *n.* பயன், தாற்பரியம், வியாக்கியானம்

In-ter'pret-er, *n.* துபாஷிகன், துபாஷி, உரையாசிரியன்

In-ter-reg'num, In-ter-reign', *n.* } இளவரசுகாலம்

In-ter'ro-gate, *v. t.* வினவு, கேள்விகேள், விசாரி

In-ter-ro-ga'tion, *n.* கேள்வி, வினு, கடா

In-ter-rog'a-tive, *n.* வினுச்சொல்

In-ter-rupt', *v. t.* தடைபண்ணு, பின்னப்படுத்து, குழப்பு

In-ter-sect', *v. t.* கத்தரி, ஊடறு, துண்டாக்கு, நறுக்கு

In-ter-sec'tion, *n.* வெட்டு, ஊடறுப்பு, நறுக்கு

In'ter-stice, *n.* கண்ணறை, நீக்கம், துவாரம்

In-ter-twine', *v. t.* முறுக்கு, முறுக்கிப்பின்னு, முறுக்கித்திரி

In'ter-val, *n.* இடைவெளி, அந்தரம்

In-ter-vene', *v. i.* இடையில்வா, குறுக்கேவா

In'ter-view, *n.* சம்பாஷணை, கூடிப்பேசுகை

In-test'a-ble, *a.* மரணசாதனஞ்செய்யப்பிராயமற்ற

In-test'ate, *a.* மரணசாதனமில்லாமற்சாகிற

In-tes'tines, *n. pl.* குடர், குடல், அந்திரம்

In'ti-ma-cy, *n.* ஊடாட்டம், கலப்பு, கொள்கை, சிநேகிதம்

In'ti-mate, *v. t.* குறி, குறிப்புக்காட்டு, சுட்டு

In'ti-mate, *a.* பழகிய, நெருங்கிய, உள்ளுக்குள்ளான

In-tim'i-date, *v. t.* பயமுறுத்து, கலக்கு, நிலைகுலை அச்சுறுத்து

In'to, *pre.* இல், உள், ஆக, கு

In-tol'er-ance *n.* கடுமை, குரூரம், கொடுமை

In-tox'i-cate, *v. t.* வெறிக்கச்செய், களிப்பி

In-tox'i-ca-ting, *a.* லாகிரியுள்ள, வெறியுள்ள, மஸ்துள்ள

In-trans'i-tive, *n.* விகன்மகம், செய்பொருள் இலாவினை

In-trans'i-tive-ly, *ad.* விகன்மகமாய்

In-trench', *v. t.* அகழு, கால்வாய்தோண்டு

In-tre-pid'i-ty, *n.* அஞ்சாமை, ஆண்மை, திடம், திடாரிக்கம்
In'tri-ca-cy, *n.* சிக்கு, கருகல், தலைதடுமாற்றம்
In'tri-cate, *a.* சிக்கான, வருத்தமான, கருகலான
In-trigue', *n.* அபாயம், தந்திரம், பிணக்கு, நெருடு
In-trin'sic, In-trin'sic-al, *a.* } உள்ளான, சுயமான, சுயம்பான, இயல்பான, உள்ள, சகச
In-tro-duce', *v. t.* உட்படுத்து, ஏற்படுத்து, செலுத்து
In-tro-duc'tion, *n.* தோற்றுவாய், ஆரம்பம்; ஏற்படுத்தல்
In-trude', *v. t.* உரிமையின்றித்தலைவை, இடையேபுகுத்து
In-tru'sion, *n.* பலபந்தம், உரிமையற்றநுழைவு
In-tu-i'tion, *n.* சுயதோற்றஅறிவு, இயற்கையுணர்வு
In-tu'i-tive, *a.* சுயதோற்றமான, இயற்கையறிவுள்ள
In-un'date, *v. t.* வெள்ளம்மூடு, வெள்ளமெடு
In-un-da'tion, *n.* சலப்பிரளயம், வெள்ளம், நீத்தம்
In-ure', *v. t.* பயிற்று, பழக்கு
In-vade', *v. t.* மேல்விழு, சருவு, ஒடுக்கு, சாடு
In'va-lid, *n.* பிணியாளி, ரோகி, பலேனன்
In-val'id-ate, *v. t.* பலஹீனப்படுத்து, வெறுமையாக்கு
In-va'sion, *n.* நாட்டுக்குட்பகைவர்செலவு, படையேற்றம்
In-vec'tive, *n.* தூஷணம், நிந்தை, வன்சொல், சுடுசொல்
In-veigh', *v. t.* தூஷி, விரோதமாய்ப்பேசு, இகழு
In-vei'gle, *v. t.* இழு, ஆசைகாட்டு, அபகரி, வஞ்சி
In-vent', *v. t.* நினைத்துண்டுபண்ணு, கற்பி, எடுத்துக்கட்டு.
In-ven'tion, *n.* சூழ்ச்சி, நிருபிதம்; கற்பனாசக்தி [டாப்பு
In'ven-to-ry, *n.* சாமான்பட்டோலை, சாமான்பெயர்வழியி
In-verse', *a.* மாறின, குறுக்கான, விலோம
proportion, விலோமமானுபாதம்

In-vert′, *v. t.* கவிழ், திருப்பு, புரட்டு, அடிதலைமாற்று
In-vest′, *v. t.* தரி, சூட்டு, உடுத்து, ஏற்படுத்து, தரிப்பி
In-ves′ti-gate, *v. t.* ஆராய், சோதி, அளவிடு, ஊடாடி அறி
In-vest′i-ture, *n.* ஆட்சியொப்புக்கொடுக்கை
In-vet′er-ate, *a.* கடுமையுள்ள, தீராத, பழய, நாட்பட்ட
In-vid′i-ous, *a.* எரிச்சலுள்ள, வன்மமுள்ள, வஞ்சகமான
In-vig′or-ate, *v. t.* திடப்படுத்து, உறுதிப்படுத்து, தேற்று
In-vin′ci-ble, *a.* வெல்லக்கூடாத, தோலாத
In-vis-i-bil′i-ty, *n.* அதரிசனம், தோற்றாமை, தோன்றாமை
In-vis′i-ble, *a.* தோற்றாத, அதரிசனமான
In-vite′, *v. t.* அழை, கூப்பிடு, வரவழை, கவர், இழு
In-vo-ca′tion, *n.* அழைப்பு, பிரார்த்தனம், போற்றுகை
In′voice, *n.* இடாப்பு, வார்நாமச்சீட்டு, கைச்சாத்து
In-voke′, *v. t.* செபி, ஆகருஷி, வேண்டிக்கொள்
In-vol′un-ta-ry, *a.* சித்தாதீனமில்லா, அனிச்சாபூர்வ
In-vo-lu′tion, *n.* சுருட்டு, மடக்கு; சமிந்தானம்
In-volve′, *v. t.* அகப்படுத்து, அடக்கு; ஏற்று, சமிந்தானி
In-vul′ner-a-ble, *a.* காயப்படக்கூடாத, இரணப்படக்கூடாத
In′ward, *a.* உள்ளான, உட்புறமான, அக
In′wards, *n. pl.* அந்திரமுதலியவை, உதரகோசங்கள்
In-wrought′, *a.* சித்திரமிழைத்த, சித்திரவேலைபொருந்திய
I-o′ta, *n.* அணு, அற்பம், சொற்பம்
Ip′se dix′it, *n.* சுயகற்பிதம்
Ip′so fac′to, *ad.* தற்சாட்சியுள்ளதாய்
I-ras-ci-bil′i-ty, *n.* முட்டுக்கோபம், சீக்கிரகோபம்
Ire′ful, *a.* கோபமுள்ள, கோபமூளுகிற, அவிகாயங்கொள்
I′ris, *n.* வானவில், மழைவில்; உபதாரை [ளத்தக்க
Irk′some, *a.* அலைக்கழிவான, தொந்தரவான

I'ron, *n.* இரும்பு, கரும்பொன், கருந்தாது, அயம்
I'ron, *a.* இரும்புக்குரிய, இரும்பாலாய, இரும்புமய
I'ron-wood, *n.* பாலை, பாலைமரம்
I-ron'ic-al, *a.* விகடாலங்கார
I'ron-y, *n.* விகடாலங்காரம், உபரோதம்
Ir-ra'di-ate, *v.* துலக்கு, பிரகாசிப்பி; துலங்கு [தமான
Ir-ra'tion-al, *a.* மதியீனமான, யுத்தியற்ற, புத்திக்குவிரோ
Ir-reg'u-lar, *a.* ஒழுங்கற்ற, முறையில்லாத, குழப்பமான
verb, (காலவிகுதியிற்) பிறழ்வினை
Ir-reg-u-lar'i-ty, *n.* ஒழுங்கீனம், முறைகேடு, நெறிகேடு
Ir-rel'e-vant, *a.* பொருந்தாத, ஒவ்வாத, வித்தியாசமான
Ir-re-lig'ion, *n.* அவபத்தி, அமார்க்கம், பத்தியின்மை
Ir-rep'a-ra-ble, *a.* சீர்ப்படுத்தக்கூடாத
Ir-rep-ti'tious, *a.* நுழைகிற
Ir-rev'er-ence, *n.* அவமதி, அநாசாரம், நிராசாரம்
Ir'ri-gate, *v. t.* நீர்ப்பாய்ச்சு, ஈரமாக்கு
Ir'ri-tate, *v. t.* கோபமூட்டு, அழற்று, சினப்பி
Ir-ri-ta'tion, *n.* எரிவு, அழற்சி, கோபம், சினப்பு
Ir-rup'tion, *n.* உடைவு, உடைப்பு, வெடிப்பு
Is, *v.* இருக்கிறான், இருக்கிறாள், இருக்கின்றது
I'sin-glass, *n.* அப்பிரகம், பூவிந்துநாதம்
Isl'and, Isle, Il'and, Ile, *n.* தீவு, தீபம், அந்தரீபம், திட்டு
Is'o-late, *v. t.* தனியேவை, புறநீங்கலாக்கு
I-sos'ce-les, *a.* சமத்துவிபுச
triangle, சமத்துவிபுசதிரிகோணம்

Is'sue, *n.* செலவு, கழிவு; விளைவு; சந்தானம்; முடிபு
Is'sue, *v.* இடு, கொடு, வா; பாய்; முடி
It, *pro.* இது, அது, அதை, இதை, தன்னை, தான்
I-tal'ics, *n. pl.* சரிந்தஎழுத்துக்கள்
Itch, *n.* சிரங்கு, சொறி, தினவு, நமைப்பு
Itch, *v. i.* சொறி, அரி, தினவெடு, ஆவலி
I'tem, *n.* காரியம், குறிப்பு, தொகை
It'er-ate, *v. t.* கூறியதுகூறு, அனுவதி
I-tin'er-ant, *n.* தேசாந்தரி, பலதேசசஞ்சாரி, பரதேசி
It-self', *pro.* அதுவே, அதையே, தன்னையே, அதுதான்
I'vo-ry, *n.* தந்தம், யானைக்கொம்பு
I'vo-ry, *a.* தந்த; எலும்புகொம்புகளுக்கு இடைமயமான

J.

Jab'ber, *v. i.* கத்து, அலப்பு, பிதற்று, பசபச
Ja'cinth, *n.* செவ்வந்திக்கல், பதுமராகம், சிவப்புக்கல்
Jack'al, *n.* நரி, ஓரி, சம்புகம்
Jack'ass, *n.* ஆண்கழுதை
Jack'et, *n.* சட்டை, கஞ்சுகம், மார்ச்சட்டை, வாரணம்
Jack'fruit, *n.* பலாப்பழம், பலாக்காய்
Jack'tree, *n.* பலாமரம், வரிக்கை
Jac-ti-ta'tion, *n.* உழற்சி
Jade, *n.* இளைத்தகுதிரை; வசவி, துட்டை
Jag, *n.* சிறுசுமை
Jagg, *n.* அரிவாட்பல், கருக்கு, பூ, வாட்பல்
Jag'ger-y, *n.* சர்க்கரை, பனங்கட்டி, கருப்புக்கட்டி
Jah, *n.* ஸ்வயம்பு, தற்பரம், யெகோவா
Jail, *n.* காவற்கூடம், சிறைச்சாலை, மறியற்கூடம்

Jail'er, *n.* சிறைச்சாலைக்காரன், காவற்கூடவிசாரிப்புக்காரன்
Jam, *n.* இனிப்புக்குழம்பு, அதிரசக்குழம்பு
Jam, *v. t.* நசுக்கு, அமர்த்து, அடர், நெரி, அமுக்கு
Jan'gle, *n.* பிதற்று, அலப்பு, பசப்பு, அவச்சத்தம்
Jan'i-tor, *n.* வாயில்காப்போன், துவாரபாலகன்
Jan'u-a-ry, *n.* சனுவரிமாசம், மார்கழி-தை
Ja-pan', *n.* தளுக்கிடுகை, மெருகிடுகை, ஒப்பம்பிடிக்கை
Jar, *n.* சாடி, தாழி, பதலை, சால், கரீரம்
Jar, *v.* குலுக்கு, அசை, சலிக்கச்செய், ஆட்டு
Jar'gon, *n.* கத்து, பிதற்று, அலப்பு, பசபசப்பு
Jas'mine, *n* மல்லிகை, மாலதி
Jas'per, *n.* ரவாக்கல், சூரியகாந்தம்
Jaun'dice, *n.* காமலை, பாண்டுகம், செங்கண்மாரி
Jaunt, *n.* உலா, சாரி, நடை, பவனி, பயணம், பிரயாணம்
Jaunt, *v. i.* திரி, சுற்றித்திரி
Jave'lin, *n.* வேல், ஈட்டி, எறிபடை, வல்லயம்
Jaw, *n.* கனு, தாடை
Jeal'ous, *a.* கொதிப்பான, மாற்சரியமுள்ள
Jeal'ous-y, *n.* கொதிப்பு, ரோசம், மாற்சரியம், ஆசங்கை
Jeer, *n.* குறளை, கேலி, சரசம், சன்னை, பரிகாசம், பகிடி
Jeer, *v.* குறளைபேசு, கேலிபண்ணு, கோட்டிபண்ணு
Je-ho'vah, *n.* ஸ்வயம்பு, ஆதாரம், தற்பரம், யெகோவா
Je-june'ness, *n.* வெறுமை, சூனியம், பாழ், மலடு
Jel'ly, *n.* குழம்பு, களி, பாகு, பாணி
Jeop'ard, Jeop'ard-ize, *v. t.* } மோசமாக்கு, நட்டத்துக்கேதுவாக்கு
Jeop'ard-y, *n.* அபாயம், மோசம், மோசநிலை
Jerk, *n.* தாக்கு, பறிப்பு, தள்ளுகை, தெறிப்பு, சுண்டுகை

Jerk, v. t. தாக்கு, தள்ளு, எற்று, தெறி, சுண்டு
Jerk'in, n. மார்க்கவசம்
Jes'sa-mine, n. மல்லிகை, மாலதி
Jest, n. பகிடி, பரிகாசம், சரசலீலை, கேலி
Jest, v. i. சரசம்பண்ணு, பகிடிபேசு, ஏளனம்பண்ணு
Jes'u-it, n. சேசு சங்கத்தான்
Jet, n. நீர்பீரிட்டுப்பாய்கை ; கருங்கிமிளை
Jet, v. i. தள்ளு, பிதுங்கு, பாய், வெளிப்புறப்படு
Jet'tee, n. இறக்கம், சாய்ப்பு [ணம், ஆபரணம்
Jew'el, n. மணி, பணி, இரத்தினம், இழை, அணிகலம், பூஷை
Jew'el-ry, n. பணிதி, பூணாரம், பூஷணம், ஆபரணம், அணி
Jews'-harp, n. மோர்ச்சங்கு
Jig'ger, n. கங்கூரம்வலிக்குஞ்சூத்திரம்
Jilt, n. நேசங்காட்டிஏய்க்கும்பெண், நேயத்துரோகி
Jin'gle, v. i. கிண்ணிடு, கிணிர்கிணிரென்றொலி, கிலுங்கு
Job, n. வேலை, குத்தகைவேலை
Job'ber, n. சிறுவேலைசெய்வோன், சிறுவர்த்தகன், தரவன்
Jock'ey, n. குதிரைவியாபாரி, எத்துவர்த்தகன்
Jo-cose', a. ஏளனமான, சரசலீலையான, இலலிதமான
Joc'u-lar, a. ஏளனமான, இலலிதமான, சரசலீலையான
Jo-cund'i-ty, Joc'und-ness, n. } பாராட்டு, களிப்பு, விளையாட்டு, இல லிதம், களியாட்டு
Jog, v. தள்ளு, அருட்டு, எழுப்பு, அசை
Jog'gle, v. அலை, ஆடு, அசை
Join, v. இசை, சேர், அணை, கூட்டு, இணை, இணக்கு, கல
Join'er, n. மூட்டுவேலைக்காரன், தச்சன்
Joint, n. இசைவு, தொடுப்பு, பொருத்து, இசைப்பு
Joint'er, n. சந்துசெய் சீவுளி

Joist, *n.* குறுக்குவிட்டம்
Joke, *n.* பகிடி, கேலி, ஏளனம், இலலிதம், பரிகாசம்
Joke, *v. i.* பகிடிபண்ணு, கேலிபண்ணு, நகை
Jole, *n.* கன்னம், கதுப்பு
Jol'li-ness, Jol'li-ty, *n.* கொண்டாட்டம், இலீலை, களியாட்டு, மகிழ்ச்சி, விளையாட்டு
Jolt, *v.* குலுக்கு, துலுக்கு, குலுங்கு
Jos'tle, *v. t.* குலுக்கு, முட்டு, தட்டுப்படு, தள்ளு
Jot, *n.* புள்ளி, குற்று, அட்சரபாகம், அணு, அற்பம்
Jounce, *v. t.* அசை, குலுக்கு, ஆட்டு
Jour'nal, *n.* நாளாகமம், பஞ்சிகை, தினவர்த்தமானம்
Jour'ney, *n.* பிரயாணம், பயணம், நடை, யாத்திரை, தாவடி
Jo'vi-al, *a.* களிப்பான, மகிழ்ச்சியான, களியாட்டான
Jo'vi-al-ness, Jo'vi-al-ty, *n.* ஆடம்பரம், அட்டோலக்கம், களிப்பு, களி, கொண்டாட்டம், இடம்பம்
Joy, *n.* மகிழ்ச்சி, களிப்பு, மனோற்சாகம், ஆலோலிதம்
Joy'ful, *a.* சந்தோஷமுள்ள, அக்களிப்பான, இன்பமான
Ju'bi-lant, *a.* விசயகெம்பீரமான, மாகளிப்பான
Ju'bi-lee, *n.* சமுற்சவம், மகாகளிப்பு
Judge, *n.* நீதியதிபதி, தருமபாலன், நடுவன்
Judge, *v. t.* நிதானி, தீர்மானம்பண்ணு, நீதிதீர், யூகி
Judg'ment, *n.* யூகம், புத்தி; நியாயத்தீர்ப்பு, முனிவு
Ju'di-ca-ture, *n.* நீதிதீர்க்கிறதத்துவம், நீதிச்சங்கம்
Ju-di'cial, *a.* நியாயஸ்தலத்துக்கடுத்த, பஞ்சாயத்துக்கடுத்த
Ju-di'cious, *a.* விவேகமுள்ள, உபாயமான, கருத்தான
Jug, *n.* கழுத்தொடுங்கியபாத்திரம், குண்டிகை, கரகம்
Jug'gle, *n.* கைச்சிமிட்டு, செப்படிவித்தை, ஏய்ப்பு
Juice, *n.* சாறு, சாரம், பால், ஊனம்; சாகம்

Ju'jube, *n.* இலந்தை
Ju'lep, *n.* அனுபானம்
Ju-ly', *n.* ஜூலாய்மாசம், ஆனி-ஆடி
Jum'ble, *v.* கலக்கு, மயக்கு, குழப்பு, சிக்குப்படுத்து
Jump, *n.* குதி, கும்மாளம், கும்மாளி, பாய்ச்சல், துள்ளு
Jump, *v.* கட, வாவு, குதி, பாய்
Junc'tion, *n.* இசைப்பு, இசைவு, கூட்டம், சங்கமம், சந்தி
Junc'ture *n.* சந்தி, சந்து ; தறுவாய்
June, *n.* ஜூன்மாசம், வைகாசி-ஆனி
Jun'gle, *n.* காடு, கானம், வனம், தூற்றுக்காடு
Jun'ior, *n.* இளையவன், இளைஞன், சேடன்
Junk, *n.* சோங்கு, குற்றி
Jun'to, *n.* கலகசங்கம், கலககூட்டம்
Ju'pi-ter, *n.* வியாழம், பிரகற்பதி, குரு [குரிய
Ju-rid'ic-al, *a.* நியாயப்பிரமாணத்துக்குரிய, நீதியதிபதிக்
Ju-ris-dic'tion, *n.* துரைத்தனம், நியாயாதிக்கம்
Ju-ris-pru'dence, *n.* இராசநீதி, இராசதருமம், நீதிசாத்திரம்
Ju'rist, *n.* நியாயசாத்திரி, நீதிவல்லோன்
Ju'ror, *n.* மத்தியஸ்தன், நடுவன், சாபிதபுருஷன்
Ju'ry, *n.* மத்தியஸ்தர், நடுவர்
Just, *n.* குதிரைவீராசிரமம், மாவுத்தாசிரமம்
Just, *a.* நீதியுள்ள, நியாயமுள்ள, செம்மையான, நேரான
Jus'tice, *n.* நீதம், நீதி, நடுவுநிலை, சமநிலை
Just-i-fi-ca'tion, *n.* நீதிமானுக்குகை, சுத்தி [யென்றுதீர்
Just'i-fy, *v. t.* நீதியென்றுதீர், நீதிமானுக்கு, குற்றமில்லை
Jus'tle, *v. t.* தள்ளு, ஓட்டு
Just'ness, *n.* நிதானம், நிதார்த்தம், நீதி, நியாயம்
Jut, *v. i.* பிதுங்கு, புறப்படு

Ju've-nile, *a.* யௌவனமான, பாலிய, இளய
Jux-ta-po-si'tion, *n.* தொடைநிலை, அயனிலை

K.

Ka-leid'o-scope, *n.* வெகுவன்னதரிசனி
Kaw, *v. i.* காக்காவென், காகமழு, காகங்கரை
Keck, *v. i.* உவட்டு, வயிற்றைப்புரட்டு, குமட்டு
Kedge, *v. t.* நங்கூரம்போட்டுக் கப்பலையிழு, கப்பலைநெக்கு
Keel, *n.* ஏராக்கட்டை, ஓடக்கட்டை
Keen, *a.* கூர்மையுள்ள, அவாவான, உருவச்செல்லுகிற
Keep, *v. t.* கா, வை, பிடி, பேணு, நிலைநில்
Keep'ing, *n.* காவல், காப்பு, நிலை, சமானம்
Keep'sake, *n.* நேசமுத்திரை, நேசக்குறிப்பொருள்
Ken, *v. t.* காணு, பார், தூரத்திற்காணு [கரம்
Ken'nel, *n.* (நாய்முதலியவற்றின்)வீடு, குழி, வளை, மிருகா
Kept, *a.* (*see* keep.) காத்த, காக்கப்பட்ட
Ker'chief, *n.* குட்டை, சதுட்கம்
Kern, *n.* திரிகைக்கல், எந்திரக்கல்
Kern'el, *n.* கொட்டை, பருப்பு, அரிசி, பூரான், வித்து, மணி
Ket'tle, *n.* கொப்பரை, கடாரம்
Key, *n.* சாவி, திறப்பு, திறவுகோல், தாழக்கோல்
Kick, *v.* உதை, காலாலெறி, காலாலெற்று
Kid, *n.* வெள்ளாட்டுக்குட்டி [பண்ணு
Kid'nap, *v. t.* மனுக்களவெடு, மனுவைத்திருடு, நரசோரம்
Kid'ney, *n.* பிருக்கம், புக்கம்
Kill, *v. t.* கொல்லு, கொலைசெய், வதை, மாய், அடி
Kiln, *n.* சூளை, காளவாய், சுள்ளை, பவனம்
Kilt, *n.* பாவாடை, முண்டு, சாயை

Kin, *n.* இனம், உறவு, இரத்தக்கலப்பு, உறவர், உற்றார்
Kind, *n.* விதம், மாதிரி, சாதி, தரம், இனம், குலம்
Kind, *a.* தயையுள்ள, பட்சமுள்ள, உருக்கமான
Kin'dle, *v.* கொளுத்து, பற்றவை, கோபமூட்டு, எரி
Kind'ness, *n.* தயை, பட்சம், அன்பு, இணக்கம்
Kin'dred, *n.* சுற்றம், உறவு, இனம், கிளை, குடும்பம், வமிசம்
Kine, *n.* பசுக்கள், கோக்கள்
King, *n.* இராசா, இராயன், மன்னன், அரசன், வேந்தன்
King'dom, *n.* இராச்சியம், அரசு; வர்க்கம்
Kink, *n.* முறுக்கு
Kins'man, *n.* உறவன், சுற்றத்தான், இனத்தான்
Kirk, *n.* தேவாலயம்
Kiss, *n.* முத்தம், சும்பனம்
Kiss, *v. t.* முத்தஞ்செய், முத்தியிடு, கொஞ்சு
Kitch'en, *n.* அடுக்களை, மடைப்பள்ளி, அட்டில், பாகசாலை
Kite, *n.* கருடன், பருந்து; படம், காற்றாடி
Kit'ten, *n.* பூனைக்குட்டி, பூனைப்பறழ்
Knap, *v. t.* கடி, அரி
Knack, *n.* சாமர்த்தியம், கைத்திறம்; சுவைப்பொருள்
Knag, *n.* கணு, புடைப்பு; முளை
Knap, *v. t.* தன்னு, கறி
Knarl'ed, *a.* கணுவான, முறுக்குச்சிரையுள்ள
Knave, *n.* வஞ்சகன், கள்வன், சுழியன், குத்திரன்
Knead, *v. t.* மாப்பிசை, பிசை
Knee, *n.* முழங்கால், முழந்து; வங்குக்கால்
Knee'pan, *n.* முழந்தாட்சில், முழங்காற்சிரட்டை
Kneel, *v. i.* முழங்காலினில், முழந்தாட்படியிடு
Knell, *n.* சாமணி, சவச்சேமமணியோசை

Knife, *n.* கத்தி, கர்த்தனி
Knit, *v.* பின்னு, முடி, புனை, இசை, துன்னு; நெரி
Knob, *n.* குமிழ், முகிழ், மொக்குள், கொம்மை
Knock, *v.* தட்டு, அடி, கொட்டு, அறை
Knoll, *n.* திடர், திட்டு, மேடு, மணற்குன்று
Knot, *n.* முடிப்பு; தடம்; கணு; பந்தி, திரளை
Knot'ty, *a.* நெருடுள்ள, முடிச்சுள்ள, சிக்கான
Know, *v. t.* அறி, மட்டுக்கட்டு, உணர், தேர், தெரி; கல, [தோய்
Knowl'edge, *n.* அறிவு, உணர்வு, கல்வி, பயிற்சி
Known, *a. see* Know. அறிந்த
Knuck'le, *n.* விரல்முளி
Ko'ran, *n.* குருன்வேதம், மகமதுவேதம்

L.

La'bel, *n.* நாமவிலாசம், நாமபத்திரிகை
La'bi-al, *a.* அதராட்சரம், ஒட்டியம்
La'bor, *n.* வேலை, உழைப்பு; பிரசவவேதனை; இடுக்கண்
La'bor, *v. i.* வேலைசெய், உழை; சூலுழை; இடுக்கணுறு
Lab'o-ra-to-ry, *n.* பவுதிகபரீட்சணசாலை, சிற்பசாலை
La'bor-er, *n.* கூலியாள், வேலையாள்
La-bo'ri-ous, *a.* பிரயாசமான, வருத்தமான
Lab'y-rinth, *n.* தடுமாறச்செய்யும்வழி, மண்டபம், சிக்கு
Lac, *n.* லாக்கை, அரக்குமெழுகு; இலட்சம்
Lace, *n.* வஸ்திராஞ்சலம், பின்னல், சரிகை
Lace, *v. t.* பின்னு, சரிகையிழை, சரிகைநெய், வரி
Lac'er-ate, *v. t.* கிழி, கிலமாக்கு, கீறு, பீறு
Lack, *n.* எச்சம், குறைவு; இலட்சம்
Lack, *v.* குறை, எஞ்சு, தேவையாயிரு

Lack'ey, *n.* கையாள், குற்றேவலாள்

La-con'ic, La-con'ic-al, *a.* } சுருக்கமான, பொழிப்பான, சுருங்கிய, சுலபமான

Lac'te-al, *n.* ரசாயனி, ரசாயனதசிரம்

Lad, *n.* வாலிபன், சிறுவன், இளைஞன், இளந்தாரி

Lad'der, *n.* ஏணி, சேணி

Lade, *v. t.* அள்ளு, இறை, மொள்ளு, முக, ஏற்று

Lad'ing, *n.* ஏற்றுமதிச்சாமான், கப்பற்சரக்கு

La'dle, *n.* அகப்பை, கரண்டி, சட்டுவம்

La'dy, *n.* தலைவி, குலமகள், துரைமகள், பிராட்டி

Lag, *n.* குண்டி, ஈனம், இழிவு

Lag, *v. i.* தாமதி, பிந்து, இழுகிநில்

La'ic, *n.* சேகரத்தான், சீஷன்

Lair, *n.* கிடை, படுக்கை, பாழி, முழை

La'i-ty, *n.* சிஷியவர்க்கம், சேகரத்தார், அதிகூஷிதர்

Lake, *n.* ஏரி, வாவி, சுனை; புகர்நிறம்

Lamb, *n.* செம்மரிக்குட்டி

Lam'bent, *a.* துள்ளுகிற, குதிக்கிற

Lame, *a.* முடமான, சொத்தியான

Lam'el, *n.* செதிள், பொருக்கு, சிலாம்பு

Lame'ness, *n.* முடம், நொண்டி, நொண்டித்தனம்

La-ment', *v.* புலம்பு, புலம்பச்செய், அரற்றுவி, கவற்று

Lam-ent-a'tion, *n.* புலம்பல், புலம்பு, பிரலாபம், அரற்று

Lam'in, Lam'in-a, *n.* } செதிள், சிலாம்பு, படலம்

Lamp, *n.* விளக்கு, தீபம்

Lam-poon', *n.* அம்பல், பழிதூற்றியெழுதியவெழுத்து

Lance, *n.* ஈட்டி, சவளம், வேல், வல்லயம்

Lan'cet, *n.* அயில், சத்திரம், ரணவைத்தியசத்திரம்
Land, *n.* நிலம், காணி, பூமி, தரை, தேசம்
Land, *v.* இறக்கு, கரையேற்று, இறங்கு
Land'mea-sure, *n.* நிலவளவைமானம், நீட்டலளவை
Land'scape, *n.* தேசத்தோற்றம், தேசக்காட்சி
Lane, *n.* ஒழுங்கை
Lan'guage, *n.* பாஷை, பேச்சு, மொழி
Lan'guid, *a.* சோர்வுள்ள, களையான, சோம்பான, சவுக்க [மான
Lan'guish, *v. i.* தளர், இளை, சோகி, மெலி, சவுங்கு
Lan'guor, *n.* தளர்ச்சி, சோர்வு, ஆயாசம், களை, சோகம்
Lank, *a.* மெலிந்த, நொய்ய, வசக்கெட்ட, நோய்ஞ்சியான
Lan'tern, *n.* தீபக்கூடு, கண்ணாடிவிளக்குக்கூடு
Lap, *n.* மடிகுறங்கு
Lap'i-da-ry, *n.* இரத்தினவியாபாரி, இரத்தினபரீட்சகன்
Lapse, *n.* செலவு, கழிவு, தவறு, பிசகு, வழு
Lapse, *v. i.* கழி, வழுவு, தவறு
Lar'ce-ny, *n.* களவு, சோரம், கரவு, திருட்டு
Lard, *n.* பன்றிக்கொழுப்பு, பன்றியிறைச்சி
Large, *a.* பரிய, பெரிய, அகன்ற, விஸ்தாரமான
Lar-gess, *n.* கொடை, ஈவு, தானம், ஈகை, இறும்
Lark, *n.* வானம்பாடி, கலிங்கம், மேகப்புள்
Lar'va, Larve, *n.* } மயிர்க்குட்டிக்குஞ்சுகள், முதலவதாரப்புழு
Lar'ynx, *n.* கிருகம், குரல்வளை
Las'car, *n.* கலாசுக்காரன், கப்பலின்வேலையாள்
Las-civ'i-ous, *a.* தூர்த்த, காமவிகாரமுள்ள, மோகமான
Lash, *n.* கசை, கசையடி; வன்சொல்
Lash, *a. t.* அடி, சவுக்காலடி, கசையாலடி

Lass, *n.* குமரி, சிறுமி, இளம்பிடி, கன்னி
Las'si-tude, *n.* ஆயாசம், தளர்வு, சோகம், சோம்பு
Last, *v. i.* தங்கு, நீடி, நிலை
Last, *a.* கடையான, இறுதியான, ஈற்ற, சென்ற
Latch, *n.* தாள், தாழ்ப்பாள், கொளுவி
Latch'et, *n.* வார், தொடுதோல்வார்
Late, *a.* சென்ற, பிந்தின, காலஞ்சென்ற
La'tent, *a.* புதையலான, மறைந்த, சூக்குமமான, கூட
Lat'er-al, *a.* பக்கமான, பாரிசமான, புடையான, அருகான
Lath, *n.* சலாகை, பாய்ச்சு, வரிச்சு
Lathe, *n.* கடைச்சல்மரம், இட்டடை [செந்தி
Lath'er, *n.* சவக்காரநுரை, சர்வக்ஷாரநுரை, சவக்கார
Lat'i-tude, *n.* விஸ்தாரம், விரிவு
celestial, விட்சேபம்
terrestrial, அட்சம்
Lat-i-tu-din-a'ri-an, *n.* தன்னிட்டக்காரன்
Lat'ten, *n.* சுத்தபித்தளை, சருகுபித்தளை
Lat'ter, *a.* பிந்தின, பின்னடியான, பின்சொல்லிய
Lat'tice, *n.* அளி, கிராதி
Laud, *v. t.* புகழ், கீர்த்தி, துதி, தோத்திரி, போற்று
Laud'a-ble, *a.* புகழத்தக்க, விதக்கத்தக்க, விதப்புள்ள
Laud'a-num, *n.* அபின்சாரம், அபேனரசம்
Laugh, Laugh'ter, *n.* சிரிப்பு, நகை, நகைப்பு, பரிகாசம், முறுவல்
Laugh, *v. i.* சிரி, நகை, முறுவலி
Launch, *v.* கப்பல்கடலிலிறக்கு; இறங்கு
Laun'der, *n.* வண்ணாத்தி; தொட்டி
Lau'rel, *n.* ஓர்பூடு, வாகை
La'va, *n.* பருவதாக்கினிப்பிரவாகம்

Lave, *v.* கழுவு, குளி, முழுகு
Lav'en-der, *n.* லவாந்தர், பரிமளநீர்
Lav'ish, *v. t.* ஆராதுரியாய்ச்செலவிடு, தூற்று, இறை
Law, *n.* கட்டளை, பிரமாணம், கற்பனை, ஒழுங்கு
Law'ful, *a.* நீதமான, நீதியான, நேரான, நியாயமான
Lawn, *n.* பாரிப்புடைவை; இடைவெளி
Law'suit, *n.* வழக்கு, வியாச்சியம், வியவ்காரம், பிராது
Law'yer, *n.* நியாயவான், நியாய்துரந்தரன், நியாயாப்பியாசி
Lax, *a.* இளக்கமான, நுகைவுள்ள, தளர்ச்சியான
Lax'a-tive, *n.* சுகபேதிமருந்து, விரேசனமருந்து
Lax'i-ty, *n.* இளக்கம், நுகைவு, இளக்காரம், சோர்வு
Lay, *n.* பாட்டு, புலமை
Lay, *v.* வை, இடு, போடு
Lay'man, *n.* சிஷியன், அதிக்ஷிதன்
La'zar, *n.* தொற்றுவியாதிக்காரன்
La'zi-ness, *n.* சோம்பு, சோம்புத்தனம், அசமந்தம்
Lea, Ley, *n.* சாட்டுவலம், செதுப்புநிலம்
Leach, *n.* சாம்பல்நிறைந்ததொட்டி
Lead, *n.* ஈயம், சீசம், தகரம், வங்கம்
Lead, *n.* முதன்மை
Lead, *v.* கூடிப்போ, நடத்து, வழிகாட்டு
Leaf, *n.* இலை, அடை, தழை, பத்திரம்
League, *n.* கட்டுப்பாடு, பந்துக்கட்டு, புணர்ப்பு
Leak, *n.* ஒழுக்கு, பொசிவு, வெடிப்பு, சில்லி, ஓட்டை
Lean, *v.* சாய், சரி, சார்த்து, சார்த்திவை
Leap, *v.* பாய், கட, குதி, உகள்
Leap'-year, *n.* குதிவருடம், அதிதிவசவருடம்
Learn, *v.* படி, கல், அறி, பழகு, பயிலு, ஓது, கலைபயிலு

Learn'ed, *a.* கற்ற, படித்த, கலைபயின்ற, நன்குணர்ந்த
Learn'er, *n.* கற்போன், சிஷன், மாணாக்கன்
Learn'ing, *n.* கல்வி, படிப்பு, அறிவு, உணர்வு, கலை
Lease, *n.* குத்தகை, வாடகை
Lease, *v. t.* குத்தகைகொடு, குடக்கூலிக்குக்கொடு
Least, *a.* மகாசிறிய, ஆகக்குறைந்த, சின்னஞ்சிறிய, அற்ப
Leath'er, *n.* பதமிட்டதோல்
Leave, *n.* உத்தரவு, விடை, விடுதலை, அனுப்பு
Leave, *v.* விடு, நீங்கு, பிரி
Leav'en, *n.* புளித்தமா
Lech'er, *n.* தூர்த்தன், காமி, காமாதுரன்
Lec'ture, *n.* பிரசங்கம், வியாக்கியானம்
Ledge, *n.* அடுக்கு, படை, பாறை
Ledg'er, *n.* கணக்குப்புத்தகம், தொகையேடு
Lee, *n.* காற்றொதுக்கு, காற்றெதிர்
Leech, *n.* சலிங்கயட்டை, சலூகை
Leek, *n.* வெண்காயம்
Leer, *n.* கடைக்கண்பார்வை
Leer, *v.* கடைக்கண்ணெறி, சிறைக்கணி
Lees, *n.* மண்டி, கசாளம்
Left, *a.* இடப்பக்கமான, இடப்பாகமான
Left, *past* of Leave. விட்ட, விடப்பட்ட, கைவிடப்பட்ட
Leg, *n.* கால், தாள், பாதம்
Leg'a-cy, *n.* சீவிதம், மரணசாதனப்பொருள்
Le'gal, *a.* நீதமான, நீதியான, சமுத்திரையான
Leg'ate, *n.* தூதன், சமாசி, பிரதிகாரகன்
Le-ga'tion, *n.* தூது, தானாபத்தியம்
Le'gend, *n.* அசத்தியபுராணம், கட்டுக்கதை
Leg-er-de-main', *n.* செப்படிவித்தை, சிமிட்டுவித்தை

Leg'i-ble, *a.* வாசிக்கத்தக்க, துலக்கமான, விளங்கக்கூடிய
Le'gion, *n.* படைமுதலியகூட்டம், படைவகுப்பு
Leg is-la'tion, *n.* விதிக்கை, பிரமாணிக்கை, கற்பிக்கை
Leg'is-la-tor, *n.* நீதிசாஸ்திரி, நியாயப்பிரமாணிகன்
Leg'is-la-ture, *n.* பஞ்சாயத்தார், நியாயசங்கத்தார்
Le-git'i-mate, *a.* நீதமான, நியாயமான
Leg'ume, Le-gu'men, *n.* கோது, ஓடு, புறணி
Leis'ure, *n.* அற்றம், சாவகாசம், ஓய்வு, விடுநேரம்
Lem'ma, *n.* திட்டாந்தப்பட்சம், உபபட்சம்
Lem'on, *n.* எலுமிச்சை, சம்பீரஎலுமிச்சை
Lam-on-ade, *n.* எலுமிச்சங்காய்பிழிந்தநீர், பானகம்
Lend, *v. t.* இரவல்கொடு, கடனாய்க்கொடு, உதவு
Length, *n.* நீளம், நீட்சி, நெடுமை, சேண்
Length'en, *v.* நீட்டு, நெடிகப்பண்ணு, நீளு, நீடு
Le'ni-ent, *n.* இளக்கம், பதமை, இலகு, மிருது
Len'i-tive, *n.* சாந்திஅவுஷதம், மிருதுவான தைலம்
Len'i-ty, *n.* பொறுதி, சாந்தம், பதமை, உருக்கம்
Lens, *n.* ஒளிவட்டம், முகுரம், கண்ணாடி
Lent, *n.* நாற்பதுநாள்உபவாசம்
Len'til, *n.* பயறு, காராமணி, துவரை, கடலை
Le'o, *n.* சிங்கம், சிங்கவிராசி
Leop'ard, *n.* சிவிங்கி, சித்திரகாயம், செம்புலி
Lep'er, *n.* குட்டரோகி, தொழுநோயன்
Lep'ro-sy, *n.* குட்டம், குட்டரோகம்
Less, *a.* குறைந்த, குறைவுள்ள
Less'en, *v.* குறை, சுருக்கு, அடக்கு, ஒடுக்கு
Les'son, *n.* பாடம், எச்சரிக்கை, விழிப்பு, புத்திமதி

Lest, *con.* ஆகாதபடிக்கு, இராதபடிக்கு
Let, *v. t.* விடு, ஒட்டு, போடு, வாடகைக்குவிடு
Leth'ar-gy, *n.* சோம்பு, இமிர், மந்தம்
Le-the'an, *a.* மறவிக்கேதுவான, பொச்சாப்புக்கேதுவான
Let'ter, *n.* எழுத்து, அட்சரம்; லிபி, நிருபம், கடிதம்
Let'ter-ed, *a.* கற்ற, படித்த, அறிவடைந்த, கலைபயின்ற
Let'ters, *n. pl.* கல்வி, புலமை, கலை, வித்தை
Leu-co-phleg'ma-cy, *n.* மகோதரவியாதிக்குணம்
Le-vant', *n.* கீழ்த்தேசம், கீழைத்தேசம்
Le-vant'er, *n.* கொண்டற்காற்று, கீழ்காற்று
Lev'ee, *n.* இராசாமுதலியபெரியோரைத்தரிசிக்குங்கூட்டம்
Lev'el, *n.* மட்டம், ஒப்பந்தம், ஒப்புரவு
Lev'el, *v. t.* பரவு, ஒப்புரவாக்கு, சமப்படுத்து
Lev'el, *a.* சமமான, மட்டமான, ஒத்த
Lev'el-ling, *n.* பரம்பு, ஒத்தசெப்பம்
Lev'er, *n.* ரோபணி
Lev'er-et, *n.* முயற்குட்டி
Le-vi'a-than, *n.* கடற்குதிரை
Lev'i-gate, *v. t.* சூரணி, தூளாக்கு, பஸ்மமாக்கு
Le-vit'i-cus, *n.* லேவியராகமம்
Lev'i-ty, *n.* இலகு, இலேசு, நொய்மை
Lev'y, *n.* சேனைச்சேர்ப்பு, சேனுசேகாம்
Lev'y, *a. t.* சேர், கூட்டு
Lewd, *a.* தூர்த்த, தீட்பான, காம
Lewd'ness, *n.* தூர்த்தத்தனம், தூர்த்தம், காமம், விடகரம்
Lex-i-cog'ra-pher, *n.* அகராதியாக்கியோன்
Lex'i-con, *n.* சத்தசங்கிரகம், அகராதி, நிகண்டு
Li'a-ble, *a.* ஏதுவான, நேரான, உரிய, உளரான
Li-a-bil'i-ty, *n.* ஏது, உரியது, நேர், பாரம், உத்தரவாதம்

Li'ar, *n.* பொய்யன், தப்பறைகாரன், புரட்டன்
Li-ba'tion, *n* மதுபானநைவேத்தியம், அர்க்கியம், ஆசமனநீர்
Li'bel, *n.* பொய்யுறுதி, பொய்ச்சீட்டு, பொய்த்தொடர்ச்சி
Lib'er-al, *a.* உதாரமான, கொடையுள்ள, தியாகமுள்ள
Lib-er-al'i-ty, *n.* ஈகை, கொடை, தருமம், தயவு, தயாளம்.
Lib'er-rate, *v. t.* விடு, தப்பவை, நீக்கு, பிரி [ள்ளவன்
Lib'er-tine, *n.* கட்டாயமில்லாதவன்; காமுகன், இட்டமு
Lib'er-ty, *n.* தன்னிட்டம், இளக்கம், சுயாதீனம்
Li-bid'in-ous, *a,* காமமுள்ள, மோகமான
Li'bra, *n.* துலா, துலாராசி
Li'bra-ry, *n.* புத்தகசாலை
Li-bra'tion, *n.* சமம், சமநிறை, சமநிலை
Lice, *n. pl. of* Louse. பேன்கள்
Li'cense, *n.* உத்தரவு, இளக்கம், இட்டம், தத்துவம்
Li'cense, *v. t.* தத்துவங்கொடு, உத்தரவுபண்ணு
Li-cen'tiate, *n.* உத்தரவுபெற்றவன், தத்துவம்பெற்றவன்
Li-cen'tious, *a.* இட்டமான, கட்டவிழ்ந்த, கட்டுக்கமையாத
Lick, *n.* நக்கல், நக்குகை; அடி
Lick, *v. t.* நக்கு; அடி
Lic'o-rice, *n.* அதிமதுரம், மதுகம்
Lid, *n.* மூடி, மூடல்
Lie, *n.* பொய், தப்பறை, புரளி, மித்தியம், மித்தியை
Lie, *v. i.* பொய்சொல்லு, பொய், பிழை
Lie, *v. i.* படு, பள்ளிகொள்ளு
Lief, *ad.* மனமாய், இட்டமாய், சந்தோஷமாய், மனசார
Liege, *n.* சுயாதிபதி, ஆண்டவன், நாயனார், எசமான்
Lieg'er, *n.* தூதாள், பிரதிகர்த்தன்
Lieu, *n.* பதில், பிரதி, ஈடு

Lieu-ten'ant, *n.* பிரதிக்குமை, பதிலுத்தியோகஸ்தன்
Life, *n.* சீவன், உயிர்ப்பிராணன், ஆவி
Lift, *v. t.* தூக்கு, உயர்த்து, எடு, ஏற்று, கிளப்பு, நிமிர்த்து
Lig'a-ment, *n.* பந்திக்கும்நார், பந்தனம்
Lig'a-ture, *n.* கட்டு, பந்தம், பிணி, கயிறு, தளை
Light, *n.* ஒளி, வெளிச்சம், சோதி, காந்தி, சுடர், பிரபை
Light, *v.* கொளுத்து, பற்றவை; படி, வதி, இறங்கு
Light, *a.* ஒளியுள்ள, வெளிச்சமான; இலேசான
Light'en, *v.* வெளிச்சங்காட்டு; இலேசாக்கு; மின்
Light'house, *n.* தீபமண்டபம், விளக்குக்கூண்டு
Light'ning, *n.* மின்னல், மின், இடியேறு
Like, *n.* நிகர், ஒப்பு, சமானம், சமம், சாயல், மாதிரி
Like, *v.* விரும்பு, ஆசி, உவ
Like, *a.* ஒத்த, இணையான, சமமான, சரியான, நிகரான
Like'ly, *a.* நிசம்போன்ற, ஏற்கத்தக்க
Lik'en, *v. t.* உவமானி, உவமி, ஒப்பிடு
Like'ness, *n.* இணை, உவமை, ஒப்பனை, உவமானம்
Lil'y, *n.* உற்பலம், குவளை, தாமரை, பங்கயம்
Li'ma-ture, *n.* அரபொடி, அயபஸ்மம்
Limb, *n.* அவயவம், அங்கம், உறுப்பு, கொம்பு, கொப்பு
Lim'ber, *a.* இளக்கமான, மெலிவுள்ள, தளர்ச்சியான
Lime, *n.* சுண்ணாம்பு, சுண்ணம்; எலுமிச்சங்காய்
Lim'it, *n.* எல்லை, மட்டு, அளவு, வரையறை, இறுதி
Lim'it, *v. t.* எல்லைப்படுத்து, வரையறு, மட்டுப்படுத்து
Lim-it-a'tion, *n.* எல்லைமானம், எல்லைக்கட்டு, அந்தம்
Limp, *n.* நெளிவு, முடம்
Limp, *v. i.* நெளிந்துநட, நொண்டு, முடவு
Lim'pid, *a.* துலக்கமுள்ள, துலங்கரமான, தெளிவுள்ள

Lim'sy, *a.* பதமையான, இளமையான, நொய்மையான
Linch'pin, *n.* அச்சாணி, அச்சுருவாணி, கடையாணி
Line, *n.* வரி, இரேகை, வரிசை; வம்சம்; கொடி; அடி
Line, *v. t.* அணைசீலையிடு, அகப்புறணியிடு, கவி, மூடு
Lin'e-age, *n.* உரிமைவழி, கிளைவழி, குடி, குலம், கோத்திரம்
Lin'e-al, *a.* வரிக்கடுத்த, வமிசவரிசையான, பரவணியான
Lin'e-a-ment *n.* அடையாளம், குறி, உருபு, இரேகை
Lin'en, *n.* சணைநூற்புடைவை
Lin'ger *v. i.* இழுகு, தாமதப்படு, சுணங்கு, சோம்பு
Lin'go, *n.* பாஷை, பேச்சு
Lin'guist, *n.* பலபாஷைகற்றோன், பலபாஷையப்பியாசி
Lin'i-ment, *n.* எண்ணெய், தைலம், மருத்துநெய்
Lin'ing, *n.* உள்ளுறைக்கூறை, அணைசீலை
Link, *n.* சங்கிலிப்பற்று, கட்டு, தளை, பந்தம், பற்று
Link, *v. t.* பிணை, இணை, புணர், கட்டு, தொடு, கொளுவு
Lint, *n.* நூற்சிலும்பல், சுகிர்ந்தபஞ்சு, சக்கை
Lin'tel, *n.* மேல்வாயிற்படி, கதவுநிலையின்மேலுத்திரம்
Li'on, *n.* சிங்கம்; ஆண்சிங்கம்
Li'on-ess, *n.* பெண்சிங்கம்
Lip, *n.* உதடு, இதழ், அதரம்; விளிம்பு
Lip'pi-tude, *n.* பீளைசாறுகை, கண்ணோய்
Liq'ue-fy, *v.* உருக்கு, கரை ; உருகு
Liq'uid, *n.* திரவவஸ்து; நெகிழொலியெழுத்து
Liq'uid-ate, *v. t.* தெளிவி, தீர், இறு, குறை
Liq'uor, *n.* செய்நீர், திராவகம், பருகுவன, பானியம்
Lisp, *v.* தெற்றிப்பேசு, கொஞ்சு, மிழற்று, கொன்[illegible] தட்டு
List, *n.* இடாப்பு, அட்டவணை; காற்கட்டுப்புடைவை, ஓரம்
List'en, *v. i.* செவிகொடு, உற்றுக்கேள்
Lit'a-ny, *n.* பிரார்த்தனை, பிரார்த்தனைப்புஸ்தகம்

Lit'er-al, *a.* சொல்லர்த்தமுள்ள, சொற்பொருளுள்ள
Lit'er-a-ry, *a.* வித்தியா சம்பந்த, கல்விக்கடுத்த
Lit-er-a'ti, *n.* அறிஞர், அறிவோர், கற்றோர், கலைஞர்
Lit'er-a-ture, *n.* கல்வி, படிப்பு, கலைஞானம், கல்விநூல்
Lithe, *a.* வளையத்தக்க, வளைகிற
Lith'o-graph, *v. t.* கல்லின்மேல்வரை, சிலையிற்சித்திரி
Li-thog'ra-phy, *n.* சிலையிற்சித்திரிக்கும்வித்தை, அச்சுப்பொ|ளியும்வித்தை
Lit'i-gant, *n.* வழக்குமுயற்சிக்காரன், வாதாடி
Lit'i-gate, *v. i.* வழக்காடு, வழக்குப்பேசு, விவாதி
Li-tig'ious, *a.* வழக்குள்ள, வழக்காடுகிற, வாதாடுகிற
Lit'ter, *n.* தண்டிகை, சிவிகை; பாழி, கிடை; வைப்புக்குட்டி
Lit'tle, *n.* கொஞ்சம், அற்பம், சிறுமை, சொற்பம்
Lit'tle, *a.* சின்ன, அற்ப, சொற்ப, சிறிய, சிறு, அணு
Lit'ur-gy, *n.* பிரார்த்தனைக்கடுத்தஒழுங்கு
Live, *v. i.* இரு, சீவி, வாழ், உயிரோடிரு
Live, *a.* உயிருள்ள, உயிரான
Live'ly, *a.* உற்சாகமுள்ள, முயற்சியான, சுறுசுறுப்புள்ள
Liv'er, *n.* பித்தாசயம், காலேயம்
Live'stock, *n.* சீவபிராணிகள், சரப்பொருள், சங்கமம்
Liv'id, *n.* கன்றலான, கன்றின
Liv'ing, *n.* சீவனம், பிழைப்பு, சீவியம், சீவனீயம்
Lix-iv'i-um, *n.* சாம்பற்சாரநீர், சாம்பனீர்
Liz'ard, *n.* முசலி, முசலிவர்க்கம்
Load, *n.* சுமை, பாரம், பொதி
Load, *v. t.* பாரமேற்று, பாரஞ்சுமத்து; தாணி; கோலு
Load'stone, *n.* காந்தக்கல்
Loaf, *n.* அப்பம், அபூபம்
Loam, *n.* பசளைமண், இருவாட்டித்தரை, களாலை

Loan, *n.* இரவல்
Loan, *v. t.* இரவல்கொடு, கடன்கொடு
Loathe, *v. t.* வெறு, அருவரு, அரோசி, அருக்களி
Lob'by, *n.* சாலை, தலைவாயில்; ஆன்கொட்டில்
Lobe, *n.* இதழ், மடல்
Lob'ster, *n.* நண்டு, ஞெண்டு, கர்க்கடம், அலவன்
Lo'cal, *a.* தானத்துக்கடுத்த, இடத்துக்கடுத்த, ஊருக்கடுத்த
Lo-cal'i-ty, *n.* இடம், தானம், நிலையம், தலம், ஊர்
Lo'cate, *v. t.* வை, நிறுத்து, தாபி, நிலைப்படுத்து
Lo-chi'a, *n.* துவாலை
Lock, *n.* பூட்டு, பொறி, பிடிப்பு, அடைப்பு; சிகை, பந்தி
Lock, *v. t.* பூட்டு, அடை, அணை, மறி
Lock'-jaw, *n.* ஈர்ப்பு, கனுஸ்தம்பனம்
Lo-co-mo'tion, *n.* இடப்பெயர்ச்சி, தானப்பெயர்ச்சி
Lo'cust, *n.* பதங்கம், தத்துக்கிளி, சலபம்
Lodge, *v.* விடுதிகொடு, நாட்டு, தங்கு, உறை
Lodg'ing, *n.* விடுதி, தரிப்பு, இல்லிடம்
Loft, *n.* மேற்கட்டு, மேல்மச்சு, மேற்றளம், மேன்மாடம்
Loft'y, *a.* உயர்ந்த, உயரமான, மகத்துவமுள்ள
Log, *n.* கட்டை, குற்றி
Log'a-rithm, *n.* பரிகன்மம்
Log'ger-head, *n.* மடயன், மந்தன், மூடன்
Log'ic, *n.* நியாயலக்கணம், தார்க்கிகம்
Lo-gi'cian, *n.* நியாயலக்கணி, தார்க்கிகன்
Lo-gom'a-chy, *n.* சொற்போர், வாக்குவாதம்
Loin, *n.* இடுப்பு, அரை, நாரி
Loi'ter, *v. i.* சுணங்கு, சோம்பு, தூங்கு, பிந்து
Loll, *v. i.* கிட, சாரு, சாய்

Lone'li-ness, *n*, தனிமை, ஏகாந்தம், ஒருமை
Long, *v. i.* அங்கலாய், அவாவு, ஆசி, இச்சி
Long, *a.* நீளமான, நீண்ட, நீட்சியுள்ள, நெடு
Lon-gev'i-ty, *n.* நீடாயுள், தீர்க்காயு, சிரஞ்சீவியம்
Long'ing, *n.* ஆசை, அவா, சோட்டை, இச்சாமயம், தவனம்
Lon'gi-tude, *n.* ரேகாந்தரம்
  terrestrial, ரேகாம்சம்
  celestial, சாயனம், போகம்
  mean, மத்திமபுடம்
  true, சுத்தபுடம்
Lon-gi-tu'din-al, *a.* ரேகாந்தர, தேசாந்தர, சாயன; புட
Long-pep'per, *n.* திப்பிலி, வால்மிளகு
Long-suf'fer-ing, *n.* சாந்தம், நீடியசாந்தம், நீடியபொறுமை
Look, *n.* பார்வை, தோற்றம், நோக்கம், சாயல்
Look, *v.* பார், நோக்கு, தோன்று, ஆராய்
Lōok'ing-glass, *n.* நிலைக்கண்ணாடி, முகக்கண்ணாடி
Loom, *n.* நெசவுதறி, நெய்வார்தறி
Loop, *n.* தடம், கண்ணி, வளையம், குளைச்சி
Loose, *v.* அவிழ், நெகிழ், நுகை, இளகு, நெகிழவிடு; பிரி
Loose, *a.* இளக்கமான, நுகைவுள்ள, சோர்வுள்ள
Loos'en, *v.* இளக்கு, நுகை, அவிழ், கழற்று, குலை
Lop, *v. t.* வெட்டு, நறுக்கு, கிள்ளு, சீய், வெட்டிச்சரி, கழி
Lo-qua'cious, *a.* அலப்புகிற, கதாப்பிரசங்கமுள்ள
Lord, *n.* கர்த்தா, கர்த்தன், ஆண்டவர், அதிபதி, அதிபன்
Lord'ly, *a.* அதிபதித்துவமுள்ள, இராசமானியமான
Lore, *n.* கல்விப்பொருள், கல்வி, வித்தை, படிப்பனை
Lose, *v.* இழ, இழந்துவிடு, கெடவிடு
Loss, *n.* நட்டம், சேதம், கேடு. பாடு, தாழ்வு, பழுது

Lost, *a.* இழந்த, சேதம்போன

Lot, *n.* பங்கு, பகுதி, கூறு, வீதம்

Lo'tion, *n.* கழுவுகை, தாவனி

Lot'ter-y, *n.* குடிகாபாதம், தாயம்

Lo'tus, *n.* தாமரை, அரவிந்தம், கமலம்

Loud, *a.* உரத்தசத்தமுள்ள, ஆரவாரமான, அமலையான

Lounge, *v. i.* பொழுதுபோக்கு, சோம்பாயிரு

Louse, *n.* பேன், யூகை

Lout, *n.* பாங்கற்றவன், மாடன், மூடன்

Love, *n.* அன்பு, சினேகம், நேசம், நட்பு, விருப்பம்

Love, *v. t.* அன்புவை, நேசி, விரும்பு, பாசம்வை

Lov'er, *n.* அன்பன், காந்தன், காதற்றலைவன், கண்ணாளன்

Low, *v. i.* அழு, அலறு, புலம்பு, உறுமு

Low, *a.* கீழான, தாழ்ந்த, பணிந்த, எளிய, தாழ்ச்சியான

Low'er, *v.* இறக்கு, அவரோகணி, குறை, இளப்பப்படு

Low'er, *n* மந்தாரம், மப்பு

Low'est, *a.* மிகுகீழான, எவற்றிலுங்கீழான, ஆழ

Low'land, *n.* பள்ளத்தரை, பள்ளம், செதுப்புநிலம்

